Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 272

வெள்ளிக்கிழமை 25 ஓகஸ்ட் 2023

ஆவணி 08 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

### மன்னாரில் பயங்கரம்

# 'பிஸ்ரல்' சூட்டில் இருவர் கொலை!



## போரின் பின் இப்போதே வடக்கில் முதன்முறை!

**மன்னார், ஓகஸ்ட் 25**

**மன்னார் - அடம்பன், முள்ளிக்கண்டல் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற பிஸ்ரல் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். மன்னார் - நொச்சிக்குளத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற இரட்டைக் கொலைக்குப் பழி வாங்கும் வகையில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.**

>>12

## சரத் வீரசேகரவுக்கு எதிராக சட்டத்தரணிகள் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 25

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் நீதிபதிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாக, நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு எதிராக

>>09



### டிப்பர் மோதுண்டதில்

## தீப்பிடித்தது மோ.சைக்கிள் சிறுவன் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 25

டிப்பர் - மோட்டார்சைக்கிள் என்பன நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் ஒருவன் எரிந்து சாவடைந்துள்ளான். விபத்தில் மோட்டார்சைக்கிள் தீப்பற்றி எரிந்ததை

>>09

## வீதியில் ஒருவர் மயங்கிச் சாவு!

### வெப்பம் காரணமா?

யாழ்., ஓக. 25

வீதியில் சென்று கொண்டிருந்த ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மயிலங்காடு,

>>09

### வவு. இரட்டைக் கொலை

## பிரதான சந்தேகநபரிடமிருந்து அலைபேசியொன்று மீட்பு!

வவுனியா, ஓக. 25

வவுனியா இரட்டைக் கொலைகள் விவகாரத்தில் பிரதான சந்தேகநபர்களில் ஒருவராக அடையாளப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவரிடம் இருந்து

>>09

### வயாவிளானில்

## 20 பவுண் நகைதிருட்டு

யாழ்., ஓக. 25

யாழ்ப்பாணம், வயாவிளான் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று 20 பவுண்

>>12

### வவு. இரட்டைக் கொலை

## தேடப்படும் நபர்களின் கடவுச்சீட்டு முடக்கம்!

வவுனியா, ஓக. 25

வவுனியா இரட்டைக் கொலை தொடர்பில், பிரதான சந்தேகநபர்கள் மற்றும் தேடப்படும் நபர்களின் கடவுச்சீட்டுகள் நீதிமன்ற அனுமதி பெற்று முடக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களின் வங்கிக் கணக்குகளைப்

>>09

## அருட்தந்தையின் கழுத்தில் கத்திவைத்துக் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்ப்பாணம் - கல்வியங்காடு தேவாலயம் ஒன்றில், அருட்தந்தை ஒருவரின் கழுத்தில் கத்தி வைத்து பெருமளவு பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4.15 மணியளவில் தேவாலயத்துக்குள் உட்புகுந்த நால்வர் அடங்கிய குழுவே அருட்தந்தையின் கழுத்தில்

>>09

## நிரந்தர சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்குக!

### கிளிநொச்சி கட்டளைத்தளபதியிடம் நேரில் வலியுறுத்தினார் ஜூலி சங்

கொழும்பு, ஓக. 25

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை இராணுவம்

>>09

### யாழ். - கொழும்பு

## சொகுசுப் பேருந்து தீப்பற்றி எரிந்தது!

### 35 பயணிகள் அருந்தப்பு

கொழும்பு, ஓக. 25

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான சொகுசுப் பேருந்து நேற்று

>>09




### தமிழர்களின் பிரச்சினைக்கு

## வலிந்து திணிக்கும் தீர்வுகள் வேண்டாம்

### அமெரிக்க நிலைப்பாடு அதுவே தூதர் ஜூலி சங் வெளிப்படை!

யாழ்ப்பாணம், ஓக. 25

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா

>>09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு மாற்றத்துக்கு தற்போது சாத்தியமில்லை

## அமெ. தூதுவர் ஜூலி சங் அபிப்பிராயம்



யாழ்ப்பாணம், ஓக.25

இனப் பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தைப் பொறுத்தவரை அதை யதார்த்தபூர்வமாக அணுகவேண்டியது அவசியம். அரசமைப்புசார் மாற்றங்களுக்கான சாத்தியப்பாடுகள் எவையும் இல்லாத நிலையில் 13ஆவது திருத்தத்தை வலியுறுத்துவதே சிறந்தது. இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் சிலரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழர் பிரச்சினைக்கு இறுதித் தீர்வாக 13ஆவது திருத்தத்தைக் கருதவில்லை. ஆயினும் 13ஆவது திருத்தம் அரசமைப்பில் உள்ளதால் அதை நடைமுறைப்படுத்தக் கோருகின்றோம். 13 ஆவது திருத்தம் தொடர்பில் தற்போதுள்ள பரபரப்பு தேவையற்றது என்று அமெரிக்கத் தூதுவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது என அவர்கள் தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்த ஜூலி சங், இந்த விடயத்தை யதார்த்தமாக சிந்தித்து அணுகவேண்டும். தற்போது அரசமைப்பு மாற்றங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம் இல்லை. 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்துவதே சிறந்தது என்று தெரிவித்தார் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

வடக்கு, கிழக்கு காணி அபகரிப்புகள், பௌத்த மயமாக்கல் தொடர்பாகவும் தூதுவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. குருந்தூர்மலை விவகாரமும் பேசப்பட்டது. இந்த விவகாரத்தில் இந்தியாவிலிருந்து வந்த இந்துத்துவக் குழுக்கள் தலையிடுகின்றனவா என்று ஜூலி சங் கேட்டார். அவ்வாறு நாம் அறியவில்லை என்று பதிலளித்தோம். இத்தகைய சம்பவங்கள் சிங்கள - பௌத்த பேரினவாதிகளாலேயே தூண்டப்படுகின்றன என்று தெரிவித்தோம் என்றும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர். (எ-இ)

வடக்கில்

# வறண்ட வானிலை நீடிக்கும் சாத்தியம்



யாழ்ப்பாணம், ஓக.25

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளுக்கு தற்போது மாலை வேளைகளில் மழை கிடைக்கும் என்றும், எதிர்வரும் 28 ஆம் திகதிவரை மேற்காவுகை மழைக்கு வாய்ப்புள்ளது எனவும், யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

மழைக்கான சாத்தியம் உள்ளபோதும், தற்போதுள்ள வறட்சியைத் தணிக்க அது போதுமானதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்துசமுத்திரத்தின் வெப்ப சுட்டெண் நேர் பெறுமானத்தில் உள்ளதால் வறண்ட வானிலை எதிர்வரும் நாள்களில் தீவிரமடையும். வறண்ட வானிலை காரணமாக நிகழும் அதிக ஆவியாக்கம் காரணமாக எங்கள் தரை மேற்பரப்பு மற்றும் தரைக்கீழ் நீர்மட்டம் மேலும் குறைவடையும். இதனால் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகள் முக்கியமாக மன்னார் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள், துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, செட்டிகுளம், நெடுங்கேணி, பூநகரி, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பல பகுதிகள் கடுமையான நீர் நெருக்கடியை எதிர்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### உணவருந்திய பொலிஸிடம் பணம் கேட்டதால் தாக்குதல்

*நல்லூரில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்ப்பாணம், நல்லூர் ஆலயத் திருவிழாவில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உணவகமொன்றில் உணவருந்திவிட்டு பணம் தராது சென்றுள்ளார். அவரிடம் பணத்தைக் கேட்டபோது தாக்குதல் நடத்தினார் என முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. நல்லூர் திருவிழாவில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் உணவகத்தில் உணவருந்திவிட்டு பணத்தைக் கொடுக்காது அங்கிருந்து சென்று கடமையில் ஈடுபட்டார். அதனையடுத்து உணவக ஊழியரொருவர் அங்கு சென்று உணவுக்கான பணத்தைக் கேட்டுள்ளார்.

அதனால் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு பொலிஸ் உத்தியோகத்தர் உணவக ஊழியரைத் தாக்கினாரென முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)



### இலங்கை வரவுள்ளார் ராஜ்நாத் சிங்

கொழும்பு, ஓக.25

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அடுத்தமாதம் இலங்கை வரவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அடுத்தமாதம் இலங்கை வரவுள்ள அவர், இந்தியா மூலோபாய ரீதியில் முதலீடுசெய்துள்ள திருகோணமலைக்குச் செல்லவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே பெற்றோலிய உற்பத்திப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கானகுழாய் உருவாக்கம் தொடர்பாகவே அமைச்சரின் திருகோணமலைப் பயணம் இருக்கும் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# 13ஆவது திருத்தம் தொடர்பில் நெகிழ்வுத்தன்மை வேண்டும்

## தமிழ்த் தலைவர்களுக்கு மிலிந்த வகுப்பு

கொழும்பு, ஓக.25

13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்கள் நெகிழ்ச்சித் தன்மையை வெளிப்படுத்தவேண்டும் என இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் சிறுபான்மையினத்தவர்களுக்கு சம உரிமையை வழங்க முயலும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது சர்ச்சைக்குரிய விடயம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தற்போது இது தொடர்பில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் தமிழ்த் தலைவர்கள் நெகிழ்ச்சித் தன்மையை வெளிப்படுத்தவேண்டும்.

தீர்வொன்றைக் காண்பதற்கு ரணில் விக்கிரமசிங்க தனது நாட்டின் தலைவர்களை கடந்த சில மாதங்களாக சந்தித்து வருகின்றார். இந்த விவகாரத்தில் நாடாளுமன்றத்தின் கருத்து ஒருமைப்பாட்டைப் பெற முயல்கின்றார் - என்றார். (எ-இ)

### காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் 6 மாதத்தில் தீர்வு

*ஓ.எம்.பி. தலைவர் கூறுகின்றார்*

கொழும்பு, ஓக.25

காணாமற் போனவர்களின் பிரச்சினைக்கு ஆறு மாதங்களுக்குள் தீர்வு காணப்படும் என காணாமற் போனோர் அலுவலகத் தலைவர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

14 ஆயிரத்து 988 பேர் காணாமற் போயுள்ளனர். இவர்களின் குடும்பங்களுக்கு மரணச் சான்றிதழ் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். மரணச் சான்றிதழை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களுக்கு காணாமற் போய்விட்டார் சான்றிதழ் வழங்கப்படும்.

காணாமற் போனவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும். சுயதொழில் உதவிகள் வழங்கப்படும். சிறுநீரக பாதிப்பு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும். அதே வேளை, கடந்த ஐந்து ஆண்டுகளில் எவரும் காணாமற் போகவில்லை - என்றார். (எ-6)

### கடந்த 8 மாதங்களில் மட்டும் 347 எச்.ஐ.வி. தொற்றாளர்கள்!

கொழும்பு, ஓக.25

இந்த ஆண்டின் கடந்த 8 மாத காலப்பகுதியில் நாட்டில் 347 எய்ட்ஸ் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று பாலியல் நோய்கள் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் ஜானகி வித்தியாபத்திரன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த ஆண்டு அடையாளம் காணப்பட்டுள்ள எய்ட்ஸ் தொற்றாளர்களில் 50 பேர் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள். பாலியல் தொடர்பான கூடுதல் செயற்பாடுகளைக் கொண்டுள்ள 15 முதல் 49 வயதானவர்களுக்கு எய்ட்ஸ் தொற்றும் வாய்ப்புகள் அதிகம் என்பது ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. ஆயினும் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுவதைக் குறைத்துக் கொள்ள முடியும்.

எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்கள் பிரேப் என்ற எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் 47 சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'ஆத்தை கூழுக்கு அழுத பாம் குத்தியன் பாலுக்கு அழுத ' கதைமாதிரி எங்கட சனங்கள் என்னென்னவோ பிரச்சினைக்குள்ள அந்தரப்பட்டுக்கொண்டிருக்கேக்க , உந்தச் சிவசேனையும் ,அது போட்ட குட்டியும் (அவையின்ர இளைஞர் அணி எண்டு சொல்லிக்கொள்ளுற 'ருத்திர சேனையும்') தேவையில்லா ஆணியளைப் புடுங்க வெளிக்கிட்டு, புதுப்புதுப் பிரச்சினையளை உருவாக்க வெளிக்கிடுகினம்.

ஏற்கனவே குருந்தூர்மலை விசயத்தில இவையள் செய்த எட்டப்பன் வேலையளால சனங்கள் கொதிச்சுப் போய் இருக்குதுகள். அந்தக் கெட்டபேரை மாத்துறதுக்கு என்ன செய்யலாம் எண்டு குப்பிறக் கவிண்டுகிடந்து யோசிக்கேக்கை அவைக்கு ஒரு ஐடியா கிடைச்சிருக்கு. 'சைவம் சார்ந்த ஒரு பிரச்சினையை இஞ்ச கிளப்பி, அதுக்கு முன்னுக்கு நிண்டு சண்டை பிடிச்சால் சனங்கள் குருந்தூர்மலை சம்பந்தமா தாங்கள் செய்த கேடுகெட்ட வேலையை மறந்து போடும் ' எண்டதுதான் அந்த ஐடியா. உடனேயே ருத்திர சேனையை, சச்சியர் ஏவிவிட அவையும் முந்தநாள் இரவு யாழ்ப்பாணம் பண்ணையடிக்குப் போய், அங்க இருக்கிற நாகபூசணி அம்மன் சிலைக்கு கொட்டில் போட வெளிக்கிட்டிருக்கினம். ஏற்கனவே அந்தச்சிலையை அங்க வைச்சதுக்கே ஆயிரத்தெட்டுப் பிரச்சினையள். இன்னமும் அந்தக் கேஸ் கோர்ட்ஸில நடந்து கொண்டிருக்கு. சிலை இருக்கிற இடம் ஆர்.டி. ஏ.க்கு (வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு) சொந்தமானது. இப்பிடியான நிலைமையில அந்தச் சிலைக்கு கொட்டில் போடுறதெண்டால், அது வில்லங்கத்துக்கு பிரச்சினை எடுக்கத்தானே?

இவை கொட்டில் போட வெளிக்கிட்டதைப் பொலிஸ் கண்டிட்டு ' வழக்கு நடக்கேக்க இப்பிடியெல்லாம் செய்யக்கூடாது. அதுவும் இரவில செய்யிறது இன்னும் பிழை. ஆர்.டி.ஏ.யிட்ட பெர்மிசன் எடுத்திட்டு பகல்ல வந்து கொட்டில் போடுங்கோ' எண்டு ஆக்களை துரத்திப் போட்டுது. தாங்கள் போட்ட திட்டம் பிழைச்சுப் போட்டு தெண்டதால, இப்ப உதுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை எண்டு ருத்திர சேனைக்காரர் நழுவப்பாக்கினமாம். ஆனால் சம்பவம் நடக்கேக்க அவையள் அங்க நிண்டதுக்கான எல்லா ஆதா ரமும் இருக்கு. அவைக்கும் சம்பவத்துக்கும் தொடர்பில்லை எண்டால் என்னெண்டு அவை அந்த நேரத்தில அங்க போனவையாம்? ஏதும் சாத்திரம் பாத்துப் போயிருப்பினமோ?

இப்பிடி இவையள் கள்ளக்கோழி பிடிக்கிற மாதிரி கொட்டில் போடுறன், சிலை வைக்கிறன் எண்டு தேவையில்லாத வேலை பார்த்தால், அதையே சரத் வீரசேகர மாதிரியான ஆக்கள் ' தமிழன் தான் மதவாதத்தை தூண்டுறான்' எண்டு உதை வைச்சே அரசியல் செய்து, எங்கட பக்க நியாயத்தை எல்லாம் இல்லாமல் செய்து போடுவாங்கள். சிவசேனையும், அது போட்ட குட்டி ருத்திரசேனையும் செய்யிற வேலையள் எல்லாம் எங்கட இனத்துக்கு உலைவைக்கிற தாத்தான் இருக்கு. உங்களுக்குச் சோறு வேணுமெண்டதுக்காக ஊருக்கு உலை வைக்காதையுங்கோ.



- பட்சி

# நல்லூரில் 5 ஆம் நாள் நிகழ்வுகள்

நல்லூர், ஓக. 25

நல்லூர் உற்சவத்தின் ஐந்தாம் நாளான இன்று வெள்ளிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் நிகழ்வுகளில் திருக்கூட்டத் தொடர் மாலை 5.45 மணிக்கு ஆதீன கலாமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் ஆனந்தா அறநெறிப் பாடசாலை மற்றும் இந்து ஆகம நவீன கலை கலாசார அறநெறிப் பாடசாலைச் சமூகத்தினரின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும். தொடர்ந்து கொழும்பு தேஜஸ்வராலய கலைக்கூட மாணவர்களின் இசையமுதம் நிகழ்வை சிறப்பிக்கும் என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் அறிவித்துள்ளது. (ச-ரி3)

# குறுக்கே குரங்குகள்; மோ.சைக்கிள் விபத்து

வீதியின் குறுக்காக குரங்குகள் பாய்ந்ததால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் நிலை குலைந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பளை புதுக்காடு மருதங்கேணி வீதியில் நடந்துள்ளது. மருதங்கேணி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் இருவரே விபத்தில் காயமடைந்தனர். காயமடைந்த ஒருவர் மருதங்கேணி மருத்துவமனையிலும் மற்றையவர் சாவகச்சேரி மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ச-ரி2-9)






## நல்லூரான் சிறப்பம்சம்

### நம் வினையழித்திட நல்லை வீதியில் அழகனாய் வீதி வருகின்றான்

தங்கமயிலேறி வரும் வடிவேலா எம்
சிந்தைதனில் நிதம் இருந்து
பந்தவினையகற்றிடையா –குன்று
வளபதியுடன் செந்தில் முதலாய்
ஆறுபடை அமரும் வேலா –இன்று
நம் வினையழித்திடவே அழகு
வடியுடை வள்ளி தெய்வயானையுடன்
நல்லை வீதியுலா வந்திடுவாய்

திருமுறைச்செல்வர்
ப.பாலசுப்பிரமணியம்
வேலனைபாலா (ஜே.பி.)

# கசூரினாவில் முரண்பாடு அறுவருக்கு விளக்கமறியல்

*அனைவரும் வெளிநாட்டுப் பிரஜைகள்*

யாழ்ப்பாணம், ஓக.25

காரைநகர் கசூரினா கடற்கரையில் உயிர்காக்கும் பொலிஸ் பிரிவினருடன் முரண்பட்ட அறுவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மதுபோதையில் கசூரினா கடற்கரையில் கடமையிலிருந்த உயிர் பாதுகாப்புப் பிரிவு பொலிஸாருடன் வவுனியா உக்குளாங்குளம் பகுதியிலிருந்து சுற்றுலாவுக்கு வருகைதந்த 6 ஆண்கள் மற்றும் 4 பெண்கள் அடங்கிய குழுவொன்று தமது மோதிரத்தை காணவில்லை என முரண்பட்டது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து 5 கனேடிய தமிழ்ப் பிரஜைகள், லண்டன் பிரஜை ஒருவர் மற்றும் 4 பெண்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களை சட்டமருத்துவ அதிகாரியிடம் முற்படுத்திய போது 6 ஆண்களும் மதுபோதையில் இருந்தமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து சந்தேகநபர்கள் 10 பேரும் மல்லாகம் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் 4 பெண்கள் விடுவிக்கப்பட்டதுடன் மற்றைய 6 பேரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

# ஆய்வுகூட மருத்துவ சேவை பணியாளர்கள் போராட்டம்

கொழும்பு ஓக. 25

அரச மருத்துவமனை ஆய்வுகூட மருத்துவ சேவையுடன் தொடர்புடைய 5 தொழிற்பிரிவுகளைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆட்சேர்ப்பின்போது நிலவும் பிரச்சினை, கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

இதனால் நேற்றையதினம் சி.டி.பரிசோதனை, எக்ஸ்ரே பரிசோதனைகள், எம்.ஆர்.ஐ. பரிசோதனை என அனைத்து இரசாயன பரிசோதனைகளும் முடங்கியதால் நோயாளர்கள் அவதிக்குள்ளாகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மஞ்சத்தில் துர்க்காதேவி

வரலாற்றுப் பிரதிசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவியின் வருடாந்த மஹோற்சவத்தின் திருமஞ்சத் திருவிழா பக்தர்கள் புடைசூழ நேற்றுமுன்தினம் புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-ரி3-27)



## கௌரி தவராசாவின் 2ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஓக. 25

அமரர் சிரேஸ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கௌரி சங்கரி தவராசா ஞாபகார்த்த அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது. கிளிநொச்சி விவேகானந்த நகரிலுள்ள வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தில் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நிகழ்வு நடைபெறும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

## யோகா கற்கைநெறி புதியபிரிவு ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக. 25

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவரும் யோகக் கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நாளை சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் பிரதி சனி, ஞாயிறு தினங்கள், அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை இந்தக் கற்கைநெறி இடம்பெறும். ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி பங்கேற்கலாம். 3 மாதகாலங்களைக் கொண்ட இந்தக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்வோருக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும் என்று வடமாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பயிலவிரும்புவோர் வடமாகாணக் கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப்படிவங்களை பெற்று கல்வி அமைச்சு, வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கமூடாகப் பெற்றுக்கொள்ளலாம் என கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ச-இ)

## 'வாழ்க்கை' கவிதை நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஓக. 25

அமரர் மருத்துவர் வேல் சாரங்கனின் 'வாழ்க்கை' கவிதை நூல் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் மருத்துவ கலாநிதி கோ.றஜீவ் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன், சாரங்கனின் பெற்றோர் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)

## 'சிறுபொறி' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.25

மாணவர் இதழான 'சிறுபொறி' நூல் வெளியீடு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலக அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

சிரேஸ்ட சட்டத்தரணியும், பதில் நீதிவானுமான சோ. தேவராஜா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலர் பிரேமினி பொன்னம்பலம் பங்கேற்கவுள்ளார்.

நிகழ்வை ஓவியம், நூல் கண்காட்சி மற்றும் செம்முகம் அரங்காற்றுகை குழுவினரின் அரங்காடல் என்பன சிறப்பிக்கவுள்ளன (ச)

## அமரர் அமிர்தலிங்கம் ஜனனதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 25

தமிழ்ப்பெருந்தலைவரும் இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 96ஆவது ஜனனதின நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. காலை 7 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேசசபை முன்றிலிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தப்படும்.

தொடர்ந்து பிற்பகல் 4 மணிக்கு பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெறும். சங்கத்தின் தலைவர் க.வே.குமரகுரு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அமரரின் நினைவுப் பேருரையை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ஈ.சரவணபவன் ஆற்றவுள்ளார்.

நினைவுரையை தொலைத்தொடர்பு திணைக்கள ஓய்வுபெற்ற அலுவலர் செ.சிவசுப்பிரமணியம் நிகழ்த்தவுள்ளார் என விழாக்குழுவினர் அறிவித்துள்ளனர். (ச)

## 'நினைவு நல்லது' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறையின் அனுசரணையில் ஒலி, ஒளி ஊடகர் பி. விக்னேஸ்வரனின் 50 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வும், றொறண்டோ 'தாய்வீடு' மாத இதழில் ஆறு ஆண்டுகளாக வெளிவந்த தொடரின் நூல் வடிவமுமான 'நினைவு நல்லது' நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் நூலுக்கு வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் நிகழ்த்தவுள்ளார். ஆய்வுரையை அரசியல் ஆய்வாளர் நிரஞ்சன் ஆற்றவுள்ளார். (ச-ரி2)

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். செலவு செய்யவேண்டியிருக்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம்.

**சிம்மம்:** எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சங்கடங்கள் நீங்கும். அனுகூலம் உண்டாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அனுசரித்துச் செல்லவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். . அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர்மலையும் குதறப்படும் நீதியும்

இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதியும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர மீண்டும் ஒருமுறை நாடாளுமன்றத்தின் கௌரவத்தை மதிப்பிறக்கம் செய்திருக்கின்றார். முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு எதிராக தனிப்பட்ட ரீதியில் அவதூறு பரப்பி அவர் உரையாற்றியதன் ஊடாக ஒட்டுமொத்த நாடாளுமன்றத்தின் மதிப்பையும் கேள்விக்கு உட்படுத்தியிருக்கின்றார். அவ்வாறான ஓர் உரையை அனுமதித்தமைக்காக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெட்கப்படவேண்டும். ஆனால் இலங்கையில் அது நடக்கப்போவதில்லை. சரத் வீரசேகர ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர். இவர் கடந்த மாதம் முல்லைத்தீவு நீதிபதிக்கு எதிராக தனிப்பட்ட தாக்குதலை நாடாளுமன்றத்தில் தொடுத்தார். அப்போதும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் சரத் வீரசேகரவைக் கடிந்தனர். ஆனால் எதிரணியிலுள்ள சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட வாய்மூடி அமைதியாகத்தான் இருந்தனர். அந்தப் பேச்சு தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் காட்டமாக கண்டித்த பின்னரும், நீதி அமைச்சர் விஜயதாஸவோ, ஜனாதிபதி ரணிலோ, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவோ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவோ கண்டிக்கவேயில்லை. அவரது உரை தவறான முன்னுதாரணம் என்று சுட்டிக்காட்டவுமில்லை. இதனால்தான் என்னவோ, தன்னை ஒருவராலும் ஒன்றும் செய்யமுடியாது என்ற கோதாவில் மீண்டும் ஒரு படி மேலே சென்று மிகக்கடுமையாக தனிப்பட்ட ரீதியில் நீதிவானை சரத் வீரசேகர தாக்கியிருக்கின்றார். அவரது உரை முழுமையாக கண்டனத்துக்குரியது என்பதற்கு அப்பால் சிறப்புரிமை என்ற கோட்டைக்குள் நின்று கொண்டு தாக்கும் அவருக்கு எதிராக மிகமிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதும் அவசியம். ஆனால் இலங்கையில் அது நடக்குமா? என்பது சந்தேகத்துக்குரியதே. ஏன் என்றால், நாட்டின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட உயர் நீதிமன்றத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலேயே அண்மைக்காலமாக உரையாற்றி வருகின்றார். அதை ஆமோதிக்கும் விதத்தில் கருத்துரைக்கிறார் சபாநாயகர் மஹிந்த யாப்பா. இப்படியிருக்கையில் இவர்கள் சரத் வீரசேகரவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார்கள் என்று துளியும் எதிர்பார்க்க முடியாது.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இலங்கையின் கட்டமைப்பு எவ்வாறு இருக்கின்றது என்பது மீண்டும் ஒருமுறை வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது. இறுதிக்கட்டப் போரின் போதான மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்டமீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் தமிழர் தரப்பு அழுத்தம் திருத்தமாக உறுதியான நிலைப்பாடாக சர்வதேச விசாரணையைக் கோருகின்றது. அது சரியானதுதான் என்பதையே சரத் வீரசேகரவின் பேச்சும், அதை ஆமோதித்து நிற்கும் அரசாங்கத்தின் நிலைப்பாடும் காட்டிநிற்கின்றன.

சிங்கள – பௌத்த பேரினவாதம் எதிர்பார்ப்பதற்கு மாறாக, நீதியின்பாற்பட்டு நீதிபதி தீர்ப்பளித்தமையை மிகமோசமாக விமர்சித்து – அந்தத் தீர்ப்பைத் தாண்டி நீதிபதியை விமர்சித்து தனது வக்கிரத்தைத் தீர்க்கின்றது அரசாங்கம். அதற்குத் தாளம் போடுகின்றன எதிர்க்கட்சிகள். இப்படியான ஆட்சிக்கட்டமைப்பினைக் கொண்ட நாட்டில் போர்க்குற்றம் தொடர்பான விவகாரங்களில் உள்ளகப் பொறிமுறையூடாக விசாரணை நடைபெறுமாக இருந்தால் அது நீதியானதாக இருக்குமா? ஒருவேளை நீதியை நிலைநாட்டும் வகையில் இலங்கை நீதிமன்றம் போர்க்குற்றம் தொடர்பில் தீர்ப்பளித்தால் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் சீடர்கள் என்ன செய்வார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். முல்லைத்தீவு குருந்தூர் மலை விவகாரத்துக்கே நாடாளுமன்றத்தில் இந்தச் சீற்றம் என்றால், போர்க்குற்ற விசாரணைக்கு தீர்ப்பளித்தால் நீதிபதியை கொலை செய்யக் கூட இந்தக் காடையர் கும்பல் தயங்காது.

**எங்களது நீதித்துறை சுயாதீனமானது என்று உலக அரங்கில் திரும்பத் திரும்பச் சொல்லி உள்ளக விசாரணைக்கு வலியுறுத்துவதை விட நீதித்துறை சுயாதீனமாக இயங்குவதை மற்றவர்கள் நம்பும்படியாக நிரூபியுங்கள்.**

### நாளொரு நல்வார்த்தை

"ஆபத்துகளை எதிர்கொள்ளாமல், உயர்ந்த விடயங்களை ஒரு போதும் அடைய முடியாது"

- நிக்கோலோ மச்சியாவெல்லி




# வீரசேகரவின் மீது கடும் நடவடிக்கை

## வலியுறுத்துகின்றது முன்னணி

**யாழ்ப்பாணம், ஓக.25**

**நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருக்கின்றார். அவருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:


மீண்டும் நாட்டில் இனக்கலவரம் ஒன்றை உருவாக்கத் திட்டமிடுகின்றனரா? என்ற சந்தேகம் எழுகின்றது. சிங்களப் பேரினவாதிகளும், ஆட்சியாளர்களும் தாங்கள் விரும்புவதையே நீதிமன்றங்கள் தீர்ப்பாக வழங்க வேண்டும் என்று விரும்புகின்றனர். தமிழ் மக்களுக்கு இலங்கையின் நீதித்துறை ஊடாக எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீதியோ தீர்வோ கிடைக்காது என்பதையே சரத் வீரசேகரவின் கருத்து உறுதி செய்திருக்கின்றது.

சரத் வீரசேகரவின் கருத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன், அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் - என்றார். (எ-27)

## இலங்கை அபிவிருத்திக்கு இந்தியா துணை நிற்கும்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25



இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்று இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்:

இலங்கை - இந்திய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கக் கூட்டத்தில் காணொலி மூலம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவும் கூட்டத்தில் உரையாற்றினார்.

உணவுப் பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, நாணய ஆதரவு மற்றும் நீண்ட கால முதலீடு ஆகிய நான்கு முக்கி யமான துறைகளில் இந்தியா-இலங்கை உறவுகள் மேலும் மேம்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார். கூட்டத்தில் உரையாற்றிய சபாநாயகர், இந்தியா வழங்கும் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். (எ-இ)

## இஸ்ரோவுக்கு சஜித் வாழ்த்து

கொழும்பு, ஓக.25

'சந்திரயான் 3' விண்கலத்தை வெற்றிகரமாக சந்திரனில் தரையிறக்கிய இந்தியாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சந்திரனின் தென்துருவத்தில் விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கிய நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. இந்தச் செயலில் சாதித்த இந்தியாவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என்று அவர் தனது வாழ்த்தில் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

| நாளை | 26.08.2023 சனிக்கிழமை ஆவணி 09 | சுபநேரம் : 03.05 - 04.35 |
| --- | --- | --- |
| | | ராகுகாலம் : 09.05 - 10.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வடக்குப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு மரதன்!

முல்லைத்தீவு, ஓக. 25

**வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான அரை மரதன் ஓட்டப்போட்டி முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து குமுழமுனை மகா வித்தியாலயம் முன்பாக நிறைவடைந்தது.**

21 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த மரதன் ஓட்டப்போட்டியில் வலயமட்டத்தில் தெரிவான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியின் தொடக்க நிகழ்வை நிதி அனுசரணையாளரான கந்தசாமி பத்மநாதன் கொடி அசைத்து ஆரம்பித்துவைத்தார்.

பெண்களுக்கான போட்டியின் ஆரம்ப நிகழ்வை ஒட்டுசுட்டான் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கை.சுதர்சன், கந்தசாமி பத்மநாதன் உள்ளிட்டவர்கள் ஆரம்பித்து வைத்தனர். ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி முழங்காவில் தேசியப் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.கிரியன் முதலிடத்தைப் பெற்றார்.

பெண்கள் பிரிவில் புங்குடுதீவு மத்திய கல்லூரியைச் சேர்ந்த அமல்கா முதலிடம் பெற்றார். (ம-19)

## ரொக்கர்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 25

உதயனின் ஊடக அனுசரணையில் இடம் பெற்றுவரும் தென்மராட்சி கிண்ணத் தொடரில், நுணாவில் ரொக்கர்ஸ் எதிர் கைதடி கிரிக்கெட் கிளப் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ரொக்கர்ஸ் அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ரொக்கர்ஸ் அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் 7 இலக்கை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெசிந்தன் 31 ஓட்டங்களையும், விதுசன் 25 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கவின்சன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

114 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கோடு ஆடிய கைதடி கிரிக்கெட் கிளப் 10 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப்பெற்றது. இதையடுத்து ரொக்கர்ஸ் அணி 15 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. பந்துவீச்சில் ரொக்கர்ஸ் அணி சார்பாக அகிபன் 4 இலக்குகளை வீழ்த்தினார். (ம)

## ஈகிள்ஸ் அணி அபாரம்

யாழ்ப்பாணம், ஓக. 25

உதயனின் ஊடக அனுசரணையில் இடம் பெற்றுவரும் தென்மராட்சிக் கிண்ணத் தொடரில், சாவா சுப்பர் கிங்ஸ் எதிர் கச்சாய் ஈகிள்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.

முதலில் துடிப்பெடுத்தாடிய சாவா சுப்பர் கிங்ஸ் அணியினர் 10 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக சாந்தீபன் 31 ஓட்டங்களையும், தர்சன் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜீவிதன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

89 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்கோடு களமிறங்கிய கச்சாய் ஈகிள்ஸ் அணி அபிசேகனின் அதிரடியான 44 ஓட்டங்கள் உதவியுடன், 9.3 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 92 ஓட்டங்களைப்பெற்று வெற்றிபெற்றது. பந்துவீச்சில் தர்சன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

## ஸ்கை அசத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 25

உதயனின் ஊடக அனுசரணையில் இடம் பெற்றுவரும் தென்மராட்சி கிண்ணத் தொடரில், லவ்லி சாவா எதிர் கைதடி ஸ்கை வோக்கர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஸ்கை வோக்கர்ஸ் அணி வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற வோக்கர்ஸ் அணி களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய லவ்லி சாவா அணி 9.5 ஓவர்களில் 67 ஓட்டங்களைப் பெற்றது. ராஜ்குமார் 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கஜன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வோக்கர்ஸ் அணி 7.1 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அதிகபட்சமாக கவன் 23 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் அமல்ராஜ் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

## ஸ்மார்சஸ் அணி இலகுவாக வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 25

உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்றுவரும் தென்மராட்சிக் கிண்ணத் தொடரில் சங்கத்தானை ஸ்மார்சஸ் எதிர் மட்டுவில் பைட்டர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஸ்மார்சஸ் அணி இலகுவாக வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பைட்டர்ஸ் அணி, துசிதனின் 27 ஓட்டங்கள் உதவியுடன் 8 ஓவரில் அனைத்து இலக்குகளையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் சங்கீதன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஸ்மார்சஸ் அணி 5.5 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக கௌசிகன் 22 ஓட்டங்களையும், சாகித்தியன் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் துசிதன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

## பைட்டர்ஸ் அணி அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 25

உதயனின் ஊடக அனுசரணையில் இடம் பெற்றுவரும் தென்மராட்சிக் கிண்ணத் தொடரில், சாவா சுப்பர் கிங்ஸ் எதிர் மட்டுவில் பைட்டர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பைட்டர்ஸ் அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா அணி 9.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் மதிவதனன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். 48 ஓட்டங்கள் வெற்றி என்ற இலக்கோடு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பைட்டர்ஸ் அணியினர் 5.5 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றனர். (ம)



## ஈகிள்ஸை வீழ்த்தியது ரொக்கர்ஸ் அணி!

யாழ்ப்பாணம், ஓக. 25

உதயனின் ஊடக அனுசரணையில் இடம்பெற்றுவரும் தென்மராட்சி கிண்ணத் தொடரில், கச்சாய் ஈகிள்ஸ் எதிர் நுணாவில் ரொக்கர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், ரொக்கர்ஸ் அணி வெற்றிபெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய ரொக்கர்ஸ் அணி, பார்த்திபன் 10 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஈகிள்ஸ் அணி 73 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதையடுத்து, 30 ஓட்டங்களால் ரொக்கர்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 90% வாகனங்களின் புகை சூழலுக்குத் தீங்கு

**போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழு அதிருப்தி**

கொழும்பு, ஓக. 25

நாட்டில் இயங்கும் 90 வீதமான வாகனங்களின் புகை வெளியீடு தரக்குறைவாகக் காணப்படுகிறது. இவை சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வாயுக்களை வெளியிடுவதால் சூழல் பாதிப்புறுகின்றது என்று வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றியு துறைசார் மேற்பார்வைக் குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார தலைமையில் அண்மையில் துறைசார் மேற்பார்வைக் குழு நாடாளுமன்றில் கூடியது.


இதன்போது நாட்டில் இயங்கும் 90 வீத வாகனங்களின் புகை வெளியீடு தரக்குறைவானது எனவும் வருடாந்த வெளியீட்டுக்கு முன்வைக்கப்படும் வாகனங்களின் 20 வீத புகை வெளியீடு தகைமையற்றது எனவும் புலப்பட்டது. அவை சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வாயுக்களை வெளியிடுவதாகவும் தெரியவந்தது.

அதற்கமைய புகை வெளியீடு தொடர்பான கண்காணிப்பு, பரிசீலனை மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான விடயங்கள் உள்ளிட்ட அறிக்கையொன்றை இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு குழுவின் தலைவர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பணித்தார்.

அத்துடன் எதிர்காலத்தில் பயணிகள் போக்குவரத்து பஸ்களை இறக்குமதி செய்யும்போது தரநிலையை ஆராய்ந்து இறக்குமதி செய்ய வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ச-இ)

# மத நம்பிக்கைக்காகவும் போராட வேண்டியநிலை

**மாவை சுட்டிக்காட்டு**



யாழ்ப்பாணம், ஓக.25

**இன விடுதலைக்காகப் போராடிய நாம் இப்போது மத நம்பிக்கைகளைப் பாதுகாக்கப் போராட வேண்டியிருக்கின்றது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மாவை சேனாதிராஜா.**

முல்லைத்தீவில் வி.பி.பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் 85 மாணவர்களுக்கு வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு புத்தகம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன.

எமது நிலங்களை எம்மால் பாதுகாக்க முடியவில்லை.

வெளிநாடுகளில் உள்ள 12 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் எங்கள் இனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக தங்கள் உழைப்பையும், அர்ப்பணிப்பையும் வழங்கி வருகின்றனர். அவர்கள் வெளிநாடுகளில் இருந்தாலும், அவர்களது எண்ணங்கள் இந்த மண்ணிலேயே இருக்கின்றன - என்றார். (எ-9)




# மாதகல் றோ. க. பாடசாலை ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 25

மாதகல் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் 143 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அண்மையில் சைக்கிள் பவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மாதகல் லூர்து அன்னை ஆலயத்தில் கல்லூரியின் வரலாற்றை மாணவர்கள் கூத்து மூலம் வெளிப்படுத்தி பின்னர் வாகன பேரணியாக மாதகலூடாக பண்டத்தரிப்பை அடைந்து பின்னர் மீண்டும் பாடசாலையை வந்தடைந்தனர். வாகனப் பேரணியில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி2-125)

# நவீன உலகுக்கு முகம்கொடுக்க கல்வித்துறையில் மறுசீரமைப்பு

**கல்வி இராஜாங்க அமைச்சர் தகவல்**

கொழும்பு, ஓக. 25

நவீன உலகுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு எமது மாணவர்களைத் தயார்ப்படுத்த விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலைத்துறை, கணிதவியல் உள்ளிட்ட பாட விடயதானங்களை உள்ளடக்கிய வகையில் எதிர்காலத்தில் கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் கல்வித்துறையின் முன்னேற்றம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கல்வித் துறையில் பல்வேறு மறுசீரமைப்புகள் மேற்கொள்ள பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நவீன உலகுக்கு முகங்கொடுக்கக் கூடியவாறு, எமது மாணவர்களைத் தயார்ப்படுத்த வேண்டியது அவசியம். அதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலைத்துறை, கணிதவியல் உள்ளிட்ட பாட விடயதானங்களை உள்ளடக்கிய வகையில் எதிர்காலத்தில் கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் நிறைவடைந்த பின்னர் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை மாணவர்கள் தமது நேரத்தை வீணாகக் கழிப்பதைத் தவிர்க்கும் வகையில், அவர்களுக்கு தொழிற்பயிற்சிகளுடன் கூடிய பாட நெறிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இது மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள உதவும்.

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க 8 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதோடு மேலும் 5 ஆயிரத்து 500 பட்டதாரி ஆசிரியர்களையும், 2 ஆயிரத்து 500 இரண்டாம் மொழி ஆசிரியர்களையும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கு விரைவாக தீர்வு காணப்படும் - என்றார். (ச-26)

# இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 25


'வேதனைகள் தீர்க்கும் வேழமுகன் பாடல்கள்' என்கின்ற இறுவட்டு வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை நாகசதுர்த்தி தினத்தன்று கோப்பாய் இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆலய பரிபாலன சபையின் தலைவர் பா.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. (ச-17)

# விவசாயிகளுக்கு ஜப்பான் உரம்

முல்லைத்தீவு, ஓக. 25

ஜப்பான் நாட்டு அரசின் நிதிப்பங்களிப்பில் வழங்கப்பட்ட இலவச உரம் முல்லைத்தீவு விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

22 ஆயிரத்து 876 மெற்றிக்தொன் உரம் வெலிஓயா தவிர்ந்த ஏனைய 10 கமநலசேவை நிலையங்களின் கீழுள்ள 5 ஆயிரத்து 376 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 1.25 ஏக்கருக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு 25 கிலோகிராம் உரமும், 2.5 ஏக்கருக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு 50 கிலோகிராம் உரமும் பகிர்ந்தளிக்கப்பட்டது என்று முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.பரணிகரன் தெரிவித்தார். (ச-ரி2-56)



# மலையக மக்கள் வாழ்வியல்; யாழ்.பல்கலையில் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 25

'மலையகம் 200' ஐ மையப்படுத்தி யாழ். பல்கலை நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டம் இணைந்து மலையக மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் 'சொர்க்கத்தின் சுமை' எனும் தொனிப்பொருளிலான கண்காட்சி நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை காட்சிக் கூடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை குறித்த கண்காட்சியை அனைவரும் பார்வையிட முடியும். ஆரம்ப நிகழ்வில் யாழ்.இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெய்பாஸ்கர், நுண்கலைத்துறை பேராசிரியர் சனாதனன், கலைப்பீடாதிபதி ரகுராம், இந்திய எழுத்தாளர் பெருமாள் முருகன், சென்னை வளர்ச்சி ஆய்வு நிறுவனத்தின் பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி, பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (ச-ரி3-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மின்னல் தாக்கி சிறுவன் சாவு!

கொழும்பு, ஓக. 25 மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி 10 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் மஹியங்கனை நவ மெதகம தெஹியத்தகண்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சகோதரர்களான இரண்டு சிறுவர்கள் வயலிலுள்ள மரம் ஒன்றில் விளையாடிக் கொண்டிருந்த வேளை இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

மற்றைய சிறுவன் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறாரென பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## திருவாசக முற்றோதல்

வட்டு, ஓக. 25 வட்டுக் கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் கண்ணாகாம்பிகா ஆலயத்தில் நாளை சனிக்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறுமென ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ம)


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கடமையாற்றும் ஐ.சிவசாந்தன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**சிங்கவேலு ஐங்கரன்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி !!!

(cr 40006) (N.1)

**டொட் லைன்கலர்லாப்**
உரிமையாளரும், ஊழியர்களும்.



## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
10 . 02 . 1950

ஆண்டவன் அடியில்
25 . 08 . 2012



**அமரர் இந்திரா சபாரத்தினம்**

எமது இல்லத்தின் மூத்தவள் நீ
எம்மை பிரிந்து பதின் ஒரு வருடங்கள்
எவ் வண்ணம் கடந்தது எமதருமை அக்காவே!
எத்தனை எத்தனை அழகிய நினவுகள்.....!
அத்தனையிலும் உங்கள் அன்பான பதிவுகள்.......!
நீங்கள் மறைந்து போனாலும். உங்கள்
குழத்தைச் சிரிப்பில் மலர்திருக்கும் அழகு முகம்
எம் நினைவில் மறையாது என்றும் நிறைந்திருக்கும்

இல.05, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(cs.51780) (N.1)


## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 24 (பழைய வட்டாரம் 04) ஆஸ்பத்திரி வீதி. ஆதன இலக்கம் 740 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மயாரி மரியா அன்ரெனற்றி புவிராஜசிங்கியும் கிளரென்ஸ் ஸ்ரான்லி பேற்றியும் சவரிமுத்துவும் ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

திருச்செல்வம் அருள்நாயகம் கைம்பெண் பிலோமினா என்பவர் 31.12.2012 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் 3106 ம் நிறைவேற்றப்பட்ட பிரகடன உறுதி மூலம் குறித்த ஆதனத்தில் 1957.09.16 ம் திகதி தொடக்கம் இலக்கத்தில் குடியிருந்து வருவதாக வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை 2016.10.31 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராஜேந்திரன் இராஜேஸ்வரன் முகதாவில் 3944ம் இலக்க உறுதி மூலம் திருச்செல்வம் அருள்நாயகம் கைம்பெண் பிலோமினா என்பவர் நிபந்தனை அறுதியாக மாணிக்கம் ராசரத்தினத்திற்கும் பெண் யோகேஸ்வரிக்கும் விற்றுள்ளார்.

பின்பு குறித்த ஆதனம் 30.04.2017 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராஜேந்திரன் இராஜேஸ்வரன் முகதாவில் 4599 ம் இலக்க உறுதி மூலம் மாணிக்கம் இராசரத்தினம் பெண் யோகேஸ்வரி ஆகியோரால் அறுதியாக (நிபந்தனை அறுதி சாட்டுதல்) திருச்செல்வம் அருள்நாயகம் கைம்பெண் பிலோமினா அவர்கள் சார்பில் அவரது மகள் ஜீலியற் மரீனா என்பவருக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவு யாழ்ப்பாணம் மாநகரசபை கிராமசேவையாளர் பிரிவு J/74 ல் யாழ் நகர் கிழக்கில் அமைந்துள்ள "இடையன் தறை" என அழைக்கப்படும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.புஷ்பராஜா அவர்களால் 2014.03.18 ம் திகதி கொண்ட வரைபட இலக்கம் 4014 ல் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட நிலப்பரப்பு இரண்டும் குளி இரண்டு தசம் ஐந்தும் (நில.பர.2ம் குளி 02.50 க்கும் எல்லைகள்

**கிழக்கு** : கணேசலிங்கம் மனைவி பிரியதர்ஷினிக்குரிய ஆதனம்
**வடக்கு** : ஆஸ்பத்திரி வீதி
**மேற்கு** : அன்ரன் மனைவி சோதிக்குரிய ஆதனம்
**தெற்கு** : சுப்பிரமணியம் மனைவி நல்லம்மாவிற்குரிய ஆதனமும் இதடங்கலும்.
இதைச் சேர்ந்தவைகளும்

தற்போது ஜீலியற் மரினா கிறிஸ்துராஜா இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் கோராவிடத்து குறித்த ஆதனமானது ஜீலியற் மரினா கிறிஸ்துராஜா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ். மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr.40007) (N.1)


## கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
04
09
1950

விண்ணில்
23
08
2023



எமது கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனம் (REDI)
கிளிநொச்சி அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும்,
இணைப்பாளருமான **புவநேசனி (நேசனி)** சுவிச்சர்லாந்து, மற்றும்
நிறுவனத்தின் உப தலைவர் **விஜிதா பகீரதன்,**
நிர்வாக உறுப்பினர் **கிரியா பதீசசிறி** ஆகியோரின் அன்புத் தாயார்

**அன்னலட்சுமி காசிலிங்கம்**

இல்லறத்தில் நல்லறமாய்த் திகழ்ந்து
இப்புவிதனில் ஏற்றமுற வாழ்ந்தீர்
நல்வாழ்க்கைத் துணைவரைப் பெற்று
நன்மக்களை இப்பாரினில் தந்த குலவிளக்கே!
புன்னகையும் பூரித்த முகமும்
வஞ்சனை சிறிதுமில்லா வெள்ளை முகமும்
தற்பெருமை அறியாத தயவான நடத்தைகளும்
எப்போதுமே உங்கள் குணமாக கண்டோமே!
எமது நிறுவனத்திற்கு நல் முத்துக்களை தந்த தாயே!!!
எம் கரம் கூப்பி அஞ்சலிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயரமடைந்துள்ள குடும்பத்தினர்க்கு
எமது ஆழ்ந்த கவலைகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
**கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனம் (REDI)**
**கிளிநொச்சி**


## யாழ்ப்பாணம் மாநகரசபை
## நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2023

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப்பெற்றுக்கொள்ள முடியும்.

* கேள்விப்படிவக்கட்டணம் :- ரூபா 1,000.00 + Vat 15%
* கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- 25.08.2023 தொடக்கம் 31.08.2023 வரை (ஞாயிற்றுக் கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணிவரை)
* கேள்விப்படிவம் விநியோகிக்கும் இறுதித்திகதி :- 31.08.2023 பி.ப 12.30 மணி வரை
* கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- 01.09.2023 முற்பகல் 10.00 மணிவரை
* கேள்விப்படிவம் திறத்தல் :- 01.09.2023 முற்பகல் 10.00 மணிக்கு
* தற்காலிக கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா 2,000.00

விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 01.09.2023 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமூகமளித்தல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தாங்களுக்குக்கிடைத்த சகல கடைகளுக்குமான கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.
கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr.40009) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரத்...
முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் இன்று போராட்டம் நடத்தவுள்ளது.
இதன்படி இன்று காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.
குருந்தூர்மலையில் பொங்கல் வழிபாடுகளுக்கு அனுமதி வழங்கிய முல்லைத்தீவு நீதிமன்றத்தின் நீதிபதி ஒரு மனநோயாளி. அவரைத் தகுதிநீக்கம் செய்து பிறிதொரு நீதிபதியை அங்கு நியமிக்கவேண்டும் என்பதாக வீரசேகர கருத்துத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-19,125)

## வீதியில்...
ஏழாலைப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்றது. இராசேந்திரம் நாகேந்திரன் (வயது -37) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
தோட்டத்தில் வேலைசெய்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே அவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.
இறப்புக்கான காரணம் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையாயினும், கடும் வெப்பத்தால் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (அ-ம-26)

## தீப்பிடித்தது...
அடுத்தே இரவீந்திரன் சாகித்தியன் (வயது-14) என்ற சிறுவன் எரிந்து உயிரிழந்தான்.
கொற்றாவத்தை பகுதியில் நேற்றையதினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மணலை ஏற்றியவாறு வந்த டிப்பரும், அதிவேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிளும் வீதி வளைவுப் பகுதியில் நேருக்குநேராக மோதியுள்ளன. மோட்டார்சைக்கிள் டிப்பரின் கீழ் பகுதியில் சிக்குண்டு சுமார் 20 அடி தூரம் வரையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.
விபத்தையடுத்து மோட்டார்சைக்கிளின் பெற்றோல் தாங்கி வெடித்து தீப்பற்றி எரிந்துள்ளது. இதையடுத்தே மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறுவன் உயிரிழந்தான். மோட்டார்சைக்கிளில் பயணித்த பிறிதொருவரான சிவஞானகரன் அஜந்தன் (வயது-22) என்பவர் படுகாயமடைந்தார். அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26,100,66)

## நிரந்தர...
ஒத்துழைக்கவேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.
வடக்கு மாகாணத்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வரும் ஜூலி சங், கிளிநொச்சி மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.பி.அமுனுகமவை நேற்றைய தினம் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.
இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இராணுவத்தினர் சிறுபான்மையினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவேண்டியது அவசியம் என்றும் இதன்போது ஜூலி சங் தெரிவித்துள்ளார். அத்துடன், இலங்கை இராணுவத்தை நவீனப்படுத்துவது தொடர்பிலும் பரஸ்பர இராணுவ ஒத்துழைப்புத் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ-ம-6)

## வலிந்து...
உறுதியாக இருக்கின்றது. ஆனால், அந்தத் தீர்வு திணிக்கப்படும் தீர்வாக இருக்கக்கூடாது, மாறாக நாட்டில் உள்ள சகலமக்களின் கருத்துகளையும் பெற்று, பொருத்தமானதாகவும் நிரந்தரத்துவமானதாகவும் இருக்கவேண்டும் என்று அமெரிக்கா கருதுகின்றது - இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்கத் தூதுவர் பத்திரிகை ஆசிரியர்களையும், சிரேஷ்ட ஊடகவியலாளர்களையும் தனியார் விடுதி ஒன்றில் சந்தித்துப் பேசினார். அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் தமிழ்மக்களின் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாகவுள்ளது. ஆனால் அந்த அரசியல் தீர்வு திணிக்கப்பட்டதாக இருக்கக்கூடாது. உள்நாட்டு மக்களின் கருத்துக்களைப் பெற்று, அவர்கள் ஏற்றுக்கொண்ட தீர்வாக இருக்கவேண்டும். இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கும் சர்வதேச நாடுகளின் நடவடிக்கையில் அரசியல் தீர்வும் ஓர் அங்கமாகவே இருக்கின்றது. முன்னுரிமை அடிப்படையில் தற்போது சில விடயங்கள் கையாளப்படுகின்றன. இந்த உடனடிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டவுடன், பொருளாதாரத்துக்கு நிரந்தரத்துவமான பலமாக அமையும் அரசியல் தீர்வு போன்ற விடயங்களுக்கான அழுத்தங்கள் கொடுக்கப்படும் - என்றார். (அ-எ)

## சொகுசுப்...
அதிகாலை தீப்பற்றி எரிந்துள்ளது. எனினும் பேருந்தில் பயணித்தவர்களுக்கு காயங்களோ அல்லது உயிராபத்தோ ஏற்படவில்லை.
யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் 35 பயணிகளுடன் புறப்பட்ட பேருந்து நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நீர்கொழும்புப் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. பேருந்தில் பயணித்தவர்கள் காயங்கள் இல்லாமல் பத்திரமாக மீட்கப்பட்டனர். அவர்கள் வேறு பேருந்துகள் மூலமாக பயணத்தைத் தொடர்ந்தனர். கொச்சிக்கடை பொலிஸார் விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26)

## தேடப்படும்...
பரிசோதிக்கவும் நீதிமன்றம் அனுமதித்துள்ளது. வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த மாதம் 23ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமையத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக வந்தது. இதன்போதே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த வழக்கில் கைதாகியுள்ளவர்கள் மற்றும் தேடப்படுபவர்களின் கடவுச் சீட்டுக்களை முடக்கவும், வங்கிக் கணக்குகளைப் பரிசோதிக்கவும் நீதிமன்றம் அனுமதித்தது. (அ-ம-18)

## அருட்தந்தையின்...
கத்தியை வைத்து மிரட்டி, அவரிடம் இருந்த 30 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது. அத்துடன் தேவாலயத்தின் உண்டியலில் இருந்த 15 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

## பிரதான...
தொலைபேசியொன்று மீட்கப்பட்டுள்ளது.
அந்தச் சந்தேகநபர் சிறைக்குள் அலைபேசியொன்றை திருட்டுத்தனமாக உடைமையில் வைத்திருந்து, தினமும் பெண்ணொருவருடன் 90 நிமிடங்களுக்கு மேலாக 35 தடவைகள் உரையாடியுள்ளார் என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவால் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அந்தத் தொலைபேசி ஊடாக 3 ஆயிரத்து 292 வெளிச்செல்லும் அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 3 தடவைகள் அந்த நபர் தன் மனைவியுடனும் உரையாடியுள்ளார். சந்தேகநபர் அலைபேசியை வைத்திருந்தமை தொடர்பில் நீதிமன்றத்தின் அனுமதிபெற்று மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-18,110)

உற்சாகமாய் இருப்போம்
நீரிழிவு நோயை தடுப்போம்
GINSOMIN®


சுறுசுறுப்பான, புத்துணர்வான, பலமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு
Ginsomin இன் பிரதான கூறான அசல் கொரியன் பன்க்ஸ் ஜின்சென் உடலில் இன்சுலின் செயற்பாட்டை மேம்படுத்துவதோடு இன்சுலின் எதிர்ப்பு செயற்பாட்டை குறைக்கிறது என்பது மருத்துவ ரீதியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.
நாடளாவிய ரீதியிலான சுப்பர் மார்க்கட்டுகள் மற்றும் பாமசிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
MEGA We care
For Your Wellness
www.megawecare.lk
077 34 100 71
011 43 66 609
Ginsomin Srilanka
இறக்குமதி செய்து விநியோகிப்போர்: A Baur & Company (Pvt) Limited

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமுதினிப் படகு மீண்டும் சேவை!

யாழ்ப்பாணம், ஓக. 25

நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து மார்க்கமான குமுதினிப் படகு நேற்று முதல் மீண்டும் பயணிகள் சேவையில் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

குமுதினிப் படகு அடிக்கடி பழுதடைகின்றமை தொடர்பில் கடும் விசனம் தெரிவிக்கப்பட்டதையடுத்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் படகின் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப் பட்டிருந்தன. இதனால் அது சேவையில் இருந்து தற்காலிகமாக விலக்கப்பட்டிருந்தது. இந்தத் திருத்தப்பணிகள் முடிந்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் குமுதினிப் படகு பயணிகள் சேவைக்கு ஜூலை 29ஆம் திகதியன்று இணைக்கப்படவிருந்தது. எனினும் மீளிணைப்பு வைபவத்திலும் குமுதினி காலைவாரியதால், அதனைச் சேவையில் இணைக்கும் திட்டம் பிற்போடப்பட்டு, மீண்டும் திருத்தப் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது திருத்த வேலைகள் நிறைவடைந்ததையடுத்து குமுதினிப்படகு, நேற்றுமாலை மீண்டும் சேவைக்குத் திரும்பியுள்ளது. இந்தப் படகு 1968 ஆம் ஆண்டுமுதல் யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக்கு இடையிலான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-27,20,125)

### சந்திராயனில் 'புத்தர்'

## இலங்கையை வறுத்தெடுக்கும் சமூக ஊடகங்களின் பதிவுகள்

நிலவின் தென் துருவத்தில் முதன்முதலாக விண்கலத்தை தரையிறக்கி இந்தியா சாதனை படைத்துள்ளது. இதற்குப் பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர். அதேவேளை, இணையவாசிகள் இதனைப் பயன்படுத்தி இலங்கையை 'வறுத்தெடுத்து' வருகின்றனர்.

அண்மைக்காலமாக தமிழர் தாயகப் பிரதேசங்களில் தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு, புத்தர்சிலை வைப்பு, விகாரை அமைப்பு என அடாவடிகள் உச்சம்பெற்றுள்ளன. இதனை மையப்படுத்தி சமூக வலைத்தளங்களில் 'மீம்ஸ்கள்' வெளியிடப்பட்டுள்ளன.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் புதல்வர் ரோஹித ராஜபக்ச, 2012 ஆம் ஆண்டில் நிலவுக்கு அனுப்புவதாகக் கூறிய விண்கலம் தொடர்பிலும் சமூக ஊடகங்களில் காரசாரமாக விவாதிக்கப்படுகின்றது. (அ-ம-ஒ,5)

### தேர் உற்சவத்தில்

## மின்சாரம் தாக்கி இரண்டு பேர் பலி!

கொழும்பு, ஓக. 25

பதுளை, நமுனுகுல - பூட்டாவத்தை கதிரேசன் கோவிலின் வருடாந்த தேர் ஊர்வலத்தின்போது மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூவர் பசறை மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். (அ-ம)


## மதுவுக்கு பணம் வழங்காததால் இளைஞர் ஒருவர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25

மது அருந்துவதற்கு குடும்பத்தினர் பணம் வழங்காததையடுத்து இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்.

பண்ணாகத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த இளைஞர் மீது போதைப்பொருள் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-ம-26,27)



## உலகக்கிண்ண செஸ்; பிரக்ஞான் இரண்டாமிடம்

சென்னை, ஓக. 25

உலகக்கிண்ண செஸ் தொடரில் இந்தியாவைச் சேர்ந்த தமிழ் வீரரான பிரக்ஞானந்தா இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

உலகக்கிண்ண செஸ் போட்டி அசர்பைஜான் நாட்டில் இடம்பெற்றது. இதில் இந்தியாவைச் சேர்ந்த தமிழ் வீரரான 18 வயதேயான பிரக்ஞானந்தா உலகின் முதல்நிலை வீரரான நோர்வேயைச் சேர்ந்த மக்னஷ் கார்ல்சனை எதிர்த்து விளையாடினார். இந்தப் போட்டியில் முதல் சுற்றில் கார்ல்சன் வெற்றி பெற்றார். இரண்டாவது சுற்று சமநிலை யானது. இதையடுத்து கார்ல்சன் உலகச் சம்பியனாக அறிவிக்கப்பட்டார். (அ-ம)

### கௌரவிப்பு

வட்டு, ஓக. 25

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் முன்னாள் உபஅதிபர் பால சுப்பிரமணியம் சண்முகத்தின் கல்வி, சமய, சமூக பணியினை நயந்து பாராட்டும் கௌரவிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சங்கரத்தை குளவத்தை முருகன் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம)


**தோட்டக் காணி விற்பனைக்கு**

புத்தூர் நவற்கிரி வீதியில் நவற்கிரியில் 46 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.

**077 706 6487**

**நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி**

**கடைத்தொகுதி அமைத்தலுக்கான கேள்வி கோரல்**

சங்கத்திற்கு சொந்தமான காணியில் புதிய கடைத்தொகுதி அமைப்பதற்கான கேள்வி கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா **5000/-**ஐ பணமாக செலுத்தி கேள்வி கோரலுக்கான விண்ணப்ப படிவத்தினை பெற்று பூரணப்படுத்தி **"தலைவர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆடியபாதம் வீதி திருநெல்வேலி"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 09.09.2023 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**குறிப்பு : மேலதிக தகவல்களிற்கு அலுவலக நேரத்தில் தொலைபேசி இலக்கத்துடன் / நேரடியாக தொடர்பு கொள்ளவும்**

தொ.இல : 0212222143
0212222969

தலைவர்
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(CR 40010)A-1


## மரண அறிவித்தல்



பிறப்பு 03 . 06 . 1973

இறப்பு 24 . 08 . 2023

### மரியஸ்ரான்லி றெக்னோ ஜெயதரன்

**கிராம உத்தியோகத்தர் J/257, பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.**

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் 695/25, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியஸ்ரான்லி றெக்னோ ஜெயதரன் அவர்கள் நேற்று (24.08.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மரியஸ்ரான்லி - லில்லிபிறிடா தம்பதியரின் மகனும், டொறின் (திருச்சிலுவை கன்னியர் வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை மொனிக்கம்மா அவர்களின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான ரஞ்சன், வரதராஜன் மற்றும் மேரியசிந்தா, கிறேஸ், தாசன் விஜயா ஆகியோரின் பெறாமகனும், அகஸ்ரின், ரஞ்சினி, காலஞ்சென்ற லூயிஸ், சாந்தி, நோயல், நீற்றா அவர்களின் அன்பு மருமகனும், சௌந்தர் நாயகம், றெஜினாகமலா அவர்களின் அன்பு மருமகனும், சதீஸ், டயானா, பாஸ்க்கரன், செறின், அரோசன் தினேஸ், யூலி அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (28.08.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி மற்றும் குடும்பத்தினர்.**

(CS 26068) A-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 04 . 05 . 1957

இறப்பு 24 . 08 . 2023

### சிங்கவேலு ஐங்கரன்

நல்லூரை பிறப்பிடமாகவும் யமுனா வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கவேலு ஐங்கரன் அவர்கள் நேற்று (24.08.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கவேலு தேவசேனா தம்பதிகளின் அன்பு மகனும், புஸ்பவதி அவர்களின் அன்புக் கணவரும், சிவசாந்தன் (Dotline Colour Lap ஊழியரும், சுயாதீன ஊடகவியலாளரும்), பிரசாந்தன் (சந்தோஷ் ஜுவல்லரி ஊழியர்), சௌமியா ஆகியோரின் அன்பு தந்தையும், சஜீபனின் (உரிமையாளர்-காஞ்சிபுரம் ரெக்ஸ்ரைல்ஸ்) அன்பு மாமனாரும், சாயிஷா அவர்களின் அன்பு பேரனும், காலஞ்சென்றவரான ரகுநாதன், வித்தியாதரன், சண்முகதாஸ், விஜயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**தொடர்புக்கு: 0763234462**
**76, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25895) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளித்திரியும் பராயத்தை பெற்றோர் தடுக்கக்கூடாது!

*மன்னார் உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை*



**மன்னார், ஓக. 25**

**முன்பள்ளியிலேயே சிறுவர்களைப் பெற்றோர் தமது கட்டுப்பாட்டினுள் வைத்து இயக்கினால் அவர்கள் எதிர்காலத்தில் சுயமாகச் செயலாற்ற திறனற்றவர்களாக மாறிவிடுவர். அந்தந்த வயதுக்கேற்ப அவர்களுக்கு சுதந்திரம் அளித்து சுயமாகச் சிந்திக்க பெற்றோர் விடவேண்டும் - இவ்வாறு மன்னார் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.ஞானராஜ் தெரிவித்துள்ளார்.**

கடந்த சனிக்கிழமை பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வில் அதிதியாக பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: முன்பள்ளி விளையாட்டு நிகழ்வு முன்பள்ளிச் சிறார்களுக்கு மட்டும் தான் என நாம் எண்ணிவிட முடியாது. சிறார்களின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் கண்டுகளிப்பதில் பெரியோர்களாகிய நாம் மகிழ்வைக் காண்கிறோம்.

எம்மில் பலர் தங்கள் முன்பள்ளி செல்லும் குழந்தைகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு அவர்களைத் தங்களின் செயற்பாடுகளுக்கேற்ப இயக்குகின்றனர். அதனால் அவர்களின் செயற்பாடுகள்- முன்னேற்றங்கள் தடைப்படுகின்றன.

முன்பள்ளிப் பருவமே அவர்களுக்குத் துள்ளித்திரியும் காலமாகும். இந்தப் பராயத்தில் தான் அவர்களை சுயமாக - சுதந்திரமாக சிந்திக்க விடவேண்டும். அப்போது தான் அவர்கள் தமது சிறந்த எதிர்காலத்துக்கு வழிசமைப்பர் - என்றார். (ச-60)



## பாரம்பரிய உணவுகள் விற்பனைக் கண்காட்சி

கிளிநொச்சி, ஓக. 25

கிளிநொச்சி மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவும் கிறிசலிஸ் நிறுவனமும் இணைந்து நடத்தும் பாரம்பரிய உணவு வகைகளின் கண்காட்சியும் விற்பனையும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி டிப்போ சந்தியிலுள்ள பசுமைப் பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது 28 விற்பனைக்கூடங்கள் அமைக்கப்பட்டு பாரம்பரிய நஞ்சற்ற உணவு வகைகள் காட்சிப்படுத்தப்பட்டன. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், மேலதிக மாவட்டச்செயலர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ச- ரி-2-113)

தங்கக் கடத்தல்

## அலி சப்ரி ரஹீம் தொடர்பில் சபாநாயகரிடம் அறிக்கை

கொழும்பு, ஓக. 25

தங்கக் கடத்தலில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்பில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்று நான்கு மாதங்களின் பின்னர், சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நொனிஸ் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக சபாநாயகருக்கு மூன்று பக்க அறிக்கையை வழங்கியுள்ளார். அலி சப்ரி ரஹீம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதும் எடுக்காமல் விடுவதும் சபாநாயகரின் கைகளில்தான் உள்ளது. (ம-6)

## காலி சிறைச்சாலையில் பக்ரீறியா தொற்று பரவல்

அவசரநிலை பிரகடனம்

கொழும்பு.ஓக. 25

காலி சிறைச்சாலையில் பரவிவரும் ஒரு வகையான பக்ரீறியாத் தொற்று நோய் நிலைமை காரணமாகவே கைதிகள் இருவர் உயிரிழந்ததுடன் தொற்றுக்குள்ளான 16 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொற்றைக் கட்டுப்படுத்த அங்கு சுகாதார அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

காலி சிறைச்சாலையில் இரு கைதிகள் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்த சம்பவம் அண்மையில் பதிவாகியிருந்தது. கைதிகளின் மரணத்துக்கான காரணம் கண்டறிய பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

சிறைச்சாலையின் கைதிகளுக்கிடையே பரவியுள்ள 'மெனிங்கோகோகல்' பக்ரீறியாவால் ஏற்பட்ட நோய்த் தொற்று நிலைமை என உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த பக்ரீறியாத் தொற்று சிறைக்குள் எவ்வாறு பரவியது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களிடம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோய்ப் பரவலை கட்டுப்படுத்த சுகாதார அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலைக்குள் அனுமதிப்பதற்கும் கைதிகளை வெளியே அழைத்துச் செல்வதற்கும் இரண்டு வாரங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## மேலதிக மருத்துவரை நியமிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக.25

பூநகரி வேரவில் பிரதேச மருத்துவமனைக்கு மேலதிகமாக ஒரு மருத்துவரை நியமிக்கவேண்டும் என்று பிரதேச பொதுஅமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

தற்போது இந்த மருத்துவமனையில் ஒரு மருத்துவரே கடமையில் உள்ளார். வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த மருத்துவமனையையே நம்பியுள்ளன.

மருத்துவர் பற்றாக்குறை காரணமாக சிகிச்சைக்கு நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

அதனால் இந்த மருத்துவமனைக்கு மேலதிகமாக ஒரு மருத்துவரை நியமிக்க வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

## முன்னாள் பொலிஸ்மா அதிபரின் கார்க்கண்ணாடி திருட்டு!

விசாரணைகள் முன்னெடுப்பு

கொழும்பு. ஓக. 25

முன்னாள் பொலிஸ்மா அதிபரும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான சந்திரா பெர்னாண்டோவின் இரண்டு கார்களின் 'சைட்' கண்ணாடிகள் திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சந்திரா பெர்னாண்டோவின் பம்பலப்பிட்டி இல்லத்துக்கு முன்பாக - பொலிஸ் பாதுகாப்புச் சாவடிக்கு அருகில் நிறுத்திவைக்கப்பட்ட இரண்டு கார்களிலிருந்தே பக்கவாட்டுக் கண்ணாடிகள் திருட்டுப் போயின.

குறித்த பொலிஸ் பாதுகாப்புச் சாவடியில் நாளாந்தம் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பாதுகாப்புக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தார். திருட்டு நடந்ததாகக் கூறப்படும் அன்றைய தினம் அவர் பணியில் இருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. அதனையடுத்து அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (ஈ-இ)

## நல்லூரில் இசையரங்கு



யாழ்ப்பாணம், ஓக. 25

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையில் இளம் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இசையரங்கு நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இந்த இசையரங்கு அடுத்தமாதம் 16ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. ஆரம்ப இசைநிகழ்வில் சிறுவர்களான செ.சபரீசன், பா.சரண்யன் நாதஸ்வரமும் செ.பிருத்விகன் தவிலும் இசைத்து இசை நிகழ்வைச் சிறப்பித்தனர். (ச-ரி3-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயாவிளானில்...

நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பலாலி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் வங்கியொன்றுக்குச் சென்றவேளையிலேயே வீட்டின் கதவுகளை உடைத்து இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. திருடப்பட்ட நகைகளின் பெறுமதி சுமார் 34 இலட்சம் ரூபா எனகணக்கிடப்பட்டுள்ளது. வீட்டில் இருந்த கண்காணிப்புக் கமராக்களும் திருடர்களால் பிடுங்கி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. பொலிஸாரும், தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-23)

## 'பிஸ்ரல்'...

மன்னார் - நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் அருந்தவராஜா (வயது - 43), மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தைச் சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது-56) ஆகிய இருவருமே பிஸ்ரல் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது அடையாளம் தெரியாத இருவர் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர் என்று தெரிய வருகின்றது. உயிரிழந்தவர்களில் ஒருவர், மன்னார் - நொச்சிக்குளம் பகுதியில் கடந்த வருடம் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவராவார். ஆதலால், பழிக்குப்பழி வாங்கும் நோக்குடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடக்கில் அண்மைக்காலமாக உள்ளூரில்தயாரிக்கப்பட்ட இடியன்துப்பாக்கிகளால் சூடுநடத்தி படுகொலைகளை மேற்கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. எனினும்,மன்னாரில் நேற்று மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் 'பிஸ்ரல்' ரக துப்பாக்கியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. '9எம்.எம்' வகைத் தோட்டாக்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. போரின் பின்னர் 'பிஸ்ரல்' போன்ற அங்கீகரிக்கப்பட்ட துப்பாக்கிகளை வைத்து படுகொலைகள் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சம்பவமாக இது பதிவாகியுள்ளது. இதுபாதுகாப்புத்துறையினரிடமும்பொலிஸ் வட்டாரத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. இது தொடர்பிலும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (அ-ம-26,56,60,125)


# காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோயில் முன்பாக **42 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.
* கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்.
* நகுலேஸ்வரர் மகாவித்தியாலயத்தில் இருந்து 250 m மீற்றர் தூரம். நகுலேஸ்வரர் ஆலயம் 50 m மீற்றர் தூரம். பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m மீற்றர் தூரம்.
* செம்மண்கான் நன்னீர் ஊற்றுநிலம். வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம். நல்ல சூழல்.
* 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.

**நிலப்பரப்பு**

**பார்வையிடும் நேரம் :-**

காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு:- குரு

**076 755 8606, 077 8743 204, 077 2880 152.**

(CS 26046 B)A-1

# மரண அறிவித்தல்

அன்னை மடியில 06 - 06 - 1945



இறைவன் அடியில் 22 - 08 - 2023

## திருமதி சோதிலட்சுமி வீரசிங்கம்

புதுக்குடியிருப்பு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிலட்சுமி வீரசிங்கம் கடந்த (22.08.2023) செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - மனோன்மணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - இலட்சுமி தம்பதிகளின் மருமகளும், வீரசிங்கத்தின் (ஓய்வுபெற்ற அதிபர் - ஸ்ரீ சுப்ரமணிய வித்தியாசாலை) அன்பு மனைவியும், மகேஸ்வரி, அரசரத்தினம் (UK), புவனேஸ்வரி, காலஞ்சென்ற அருந்தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈஸ்வரன் (UK), சுதாகரன் (சத்திரசிகிச்சை நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை), தயாபரன் (UK)), திருமகள் (UK), இமாவதி (ஆசிரியை, வித்தியானந்தாக் கல்லூரி - முள்ளியவளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், மெடோனா (UK), ராதிகா (ஆசிரியை - கொழும்பு இராமகிருஷ்ண வித்தியாலயம்), நீலவேணி (UK), சர்வேஸ்வரன் (UK), பத்மன் (தோல் வைத்திய நிபுணர் - மாவட்டப் பொது வைத்தியசாலை - மாஞ்சோலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், வேஜின்லட்சுமி, ஷாரங்கன் (ஆசிரியர்), தர்மிகா, சலன், சலனி, பிரம்மிக்கா, ஜர்மிக்கா, இளங்கோவன், திரிஷாளினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனத்துக்காகப் புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR/40001)AH-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (11.08.2023) வெள்ளிக்கிழமை
அன்று சிவபதமடைந்த
அமரர் **நாராயணசாமி**
**கோவர்த்தனன்** அவர்களின்
அந்தியேட்டி கிரியைகள் இன்று
(25.08.2023) வெள்ளிக்கிழமை காலை
08.00 மணியளவில் கீரிமலை புனித
தீர்த்தக்கரையிலும்
வீட்டுக்கிருத்தியகிரியைகள் நாளை
(26.08.2023) சனிக்கிழமை நண்பகல்
12.00 மணியளவில் அன்னாரது
இல்லத்திலும் நடைபெறவுள்ளதால்
இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்று தாங்கள் தங்கள் குடும்ப சகிதம்
வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்
பிராத்தனையிலும் அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

39, பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

குடும்பத்தினர்
077 6258 839




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org